# <u>Fr. A. Kulandai Lawrence</u>

Fr. A. Kulandai Lawrence, son of Mr. Arulappan and Kuladnai Therese was the first born among the six children, hailing from the family of '*Kuttikaara Veedu'* in the village of Kalpalayathanpatty, a Substation to Malayadipatty. Sr. Elizabeth Mary, his younger sister, is also a nun in the Servite congregation.

Fr. A. Kulandai Lawrence was a good musician and continued to develop this god given gift even as a seminarian. He did his philosophy at St. Paul's Seminary, Trichy and was sent to St. Joseph's College to do his graduation in Mathematics. After graduation, he continued his theological studies at St. Paul's Seminary; even there he developed himself as a good musician; for a year he was the choirmaster too.

As a deacon, he with Dn. Earnest, his companion was sent to W. Marianathapuram for the 6 months (1988 Oct - 1989 May) of diaconate ministry, where Fr. Stephen Gaspar was the Parish Priest. He supported the parish priest with his classmate for taking census in view of providing family cards to each family which stands a successful history in the Parish to this day.

On 04-05-1989, he stepped up to priesthood, and was ordained by Most Rev. Dr. Thomas Fernando, the then Bishop of Trichy, at the Cathedral. The following day, he said his first Thanksgiving Mass at Malayadipatty St. Xavier's Parish Church. On 06-05-1989, he celebrated the first thanksgiving mass at Kalpalayathanpatty, his native; notably he was the first priest from that village.

He was appointed as the Assistant Parish Priest of Holy Redeemer's Parish (Present Basilica), Trichy for a year (1989-1990). He was then assigned as the first Parish Priest of Assisi Nager, Dindigul Vicariate from 1990-1992.

He then opted to serve in the vicariate of Trichy; the then Bishop appointed him as the Parish Priest of Theresalpuram in june-1992. While serving at the parish, he also obtained a diploma degree in B. Ed via correspondence course. However, by then his health was becoming weaker, and soon became very ill.

At his own request to the bishop, he came and stayed with Fr. Stephen Gaspar, who was then the Parish Priest of Marambadi from August until his death. From there, he was undertaking treatment in St. Joseph's hospital, Dindigul. In spite of a lot of effort to recover him medically and spiritually, he could not succeed in survival; he breathed his last on 01-11-1992.

His body was brought to Malayadipatty Parish Church, and was kept there throughout the night for the veneration. The following day, he was taken to the Bishop's House, Trichy at 9:00 a.m. The funeral mass was arranged at 3:00 p.m. in the old cathedral. Most. Rev. Dr. Thomas Fernando, the then Bishop presided over the mass and Fr. Stephen Gaspar gave the final oration after the Holy Eucharist. Thousands of faithful gathered to pay their final

homage to this young priest, whom God called back within three years of his priesthood. His remains were buried at Priests' Cemetery near the Cathedral ground.

May the Soul of Fr. A. Kulandai Lawrence rest in peace. Amen

- **Fr. Stephen Gaspar**

<u>அருட்தந்தை அ. குழந்தை லாரன்ஸ் - வாழ்க்கை வரலாறு</u>

திருச்சி மறைமாவட்டம் மலையடிப்பட்டி பங்கிலுள்ள கல்பாளையத்தான்பட்டி குட்டிக்காரக் குடும்பத்தில் திரு. சி. அருளப்பன். திருமதி குழந்தை தெரஸ் என்பவர்களுக்கு 25.05.1956 திருமணமாகி ஐந்து ஆண்டுகள் குழந்தை இல்லாமல் இருந்து அதன்பின் 03.10.1961-ல் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணியளவில் பிறந்தவர்தான் அருட்தந்தை அ. குழந்தை லாரன்ஸ். அவருக்கு இரண்டு தம்பிகள், மூன்று தங்கைகள். அப்போது மலையடிப்பட்டியில் பங்குத்தந்தையாக பணியாற்றிய அருட்தந்தை K.V. Peter அடிகளாரால் 15-10-1961 அன்று திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. 09.08.1970 ல் அருட்தந்தை மரியானந்தம் அடிகளாரால் முதல் நற்கருணை வழங்கப்பட்டது.

முதல் வகுப்பு முதல் 8-ம் வகுப்புவரை தனது பெற்றோர் ஆசிரியப்பணி செய்துவந்த துவரங்குறிச்சி அரசுப் பள்ளியில் பயின்றார். அதன் பின் இறையழைத்தலை ஏற்று திருச்சி புனித அகுஸ்தினார் குருமடத்தில் இணைந்த பின்பு, அங்கிருந்து கொண்டே 9-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரை ஆர்.சி. மேல்நிலைப் பள்ளியில் பயின்றார். அடுத்த மூன்றாண்டுகள் திருச்சி புனித வளனார் கல்லூரியில் (கணிதம்) பட்டப்படிப்பு பயின்றார். அதன்பின் ஓராண்டு புனித அகுஸ்தினார் குருமடத்திலும், அடுத்த ஓராண்டு மதுரை கருமாத்தூரிலும் குருத்துவப் பயிற்சியின் அடிப்படை கல்வி கற்றார். அதன் பின் தத்துவவியல், இறையியல் படிப்பை திருச்சி புனித பவுல் குருமடத்தில் பயின்றார். படிப்பைப் பொறுத்தவரை, தந்தையவர்கள் எல்லாவற்றிலும் முதல் மாணவர்தான்.

1988ம் ஆண்டு திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார். களப்பயிற்சிக்காக மேற்கு மரியநாதபுரம் பங்குத்தந்தை அருட்தந்தை ஸ்டீபன் கஸ்பார் அவர்களின் வழிகாட்டுதலால் பங்கின் மக்கள் தொகை கணக்கெடுப்பு செய்து, எல்லா குடும்பங்களோடும் நல்லுறவை வளர்த்துக்கொண்டார். இது அவரது குருத்துவ வாழ்விற்கு அடித்தளம் அமைந்தது; தனது முன்மாதிரிகையான வாழ்வால் உரமிட்டவர் அருட்தந்தை ஸ்டீபன் கஸ்பார் என்றால் அது மிகையாகாது.

04-05-1989 அன்று, மாலை மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்தில், திருச்சியின் மேதகு ஆயர் தாமஸ் பெர்ணான்டோ அவர்களால் அருட்பொழிவு செய்யப்பட்டார். 05-05-1989 அன்று வெள்ளிக்கிழமை காலை மலையடிப்பட்டியில் வரவேற்கப்பட்டு புனித சவேரியார் ஆலயத்தில் தனது முதல் திருப்பலியை நிறைவேற்றினார். 06.05.1989-ஆம் ஆண்டு சனிக்கிழமை காலை தனது பிறந்த ஊரில் கல்பாளையத்தான்பட்டியில் திருப்பலி நிறைவேற்றினார். கல்பாளையத்தான் பட்டிக்கு இவர் தான் முதல் குரு என்பது குறிப்பிடத்தக்கது.

பணிசெய்த இடங்கள்:

1989-1990 : திருச்சி பாலக்கரை உலக மீட்பர் ஆலயம் (உதவிப் பங்குத்தந்தை

1990-1992 : திண்டுக்கல் அசிசிநகர் (புதிய பங்கு) பங்குத்தந்தை

1992 ஜூன் முதல் ஆகஸ்ட் வரை : திருச்சி தெரசாள்புரம் (பங்குத்தந்தை)

1992 ஆகஸ்ட் மாதம் உடல் நலம் இன்மையால் (TB) மருத்துவ சிகிச்சைக்காக, திண்டுக்கல் மாரம்பாடியில் அப்போது பங்குத்தந்தையாக இருந்த எங்கள் அருமை அண்ணன் அருட்தந்தை. ஸ்டீபன் (மண்ணின் மைந்தர்) கஸ்பார் அடிகளாரிடம் சென்று ஓய்வு எடுத்துக்கொண்டே திண்டுக்கல் புனித ஜோசப் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சையும் பெற்று வந்தார். இறுதி நாட்களில் தந்தையவர்களின் உதவி அளப்பரியது.

எனினும், சிகிச்சை பலனின்றி 01-11-1992 ம் ஆண்டு ஞாயிறு மாலை 05.30 மணியளவில், திண்டுக்கல் மருத்துவமனையில் இறைவனடி சேர்ந்தார். 02-11-1992 அன்று திருச்சி மறைமாவட்டக் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார்.

குணநலன்கள்:

- அன்பானவர். அமைதியானவர். பாசத்திற்கு சொந்தக்காரர்.
- ஆடம்பரமில்லா எளிய வாழ்க்கை முறை
- இறைபக்தி, அன்னைமரியாளிடம் அதிகமான பக்தி கொண்டவர்
- தனது பெயருக்கேற்ப குழந்தை உள்ளம் கொண்டவர்
- பெற்றோர் பெரியோரிடம் மிகுந்த மரியாதையாக நடந்து கொள்வார்.
- தனது கடமைகளைத் திறம்படச் செய்பவர்
- இசை அமைப்பாளர் இசைக் கருவிகள் மீட்டுவதில் சிறந்தவர்.
- தனது இசை ஞானத்தால் பலரைக் கவர்ந்தவர்.
- ஏழை எளிய மக்களிடம் கருணையுடன் இருப்பார்.
- தனது திறமைகளை பிறருக்கும் கற்றுக்கொடுத்து வளர்ப்பவர்
- படிப்பில் கெட்டிக்காரர். Degree Holder.
- திட்டமிட்டுச் செயல்படுபவர்

- அருட்சகோதரி. எலிசபெத் மேரி, **Servite**
தந்தையின் இளைய சகோதரி